செ.வெ.எண். 389 நாள்.26.05.08

# தீர்மானம்

தமிழகத்தில் ஆற்று மணல் எடுத்து விற்பனை செய்தல் தொடர்பாக, அரசு பின்பற்ற வேண்டிய கொள்கை பற்றி கலந்தாலோசனை செய்வதற்காக, சட்டப்பேரவைக் கட்சித் தலைவர்களின் கூட்டம், 26.5.2008 அன்று, சென்னை – தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்தாலோசனைக் கூட்டத்தில் –

சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டி.சுதர்சனம் அவர்கள் டெண்டர் மற்றும் ஏலம் விடுவதினால் பல புதிய பிரச்சினைகள் எழும் என்றும்; மணல் எடுத்து விற்பனை செய்வதை அரசே தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்; கேரளாவிற்கு எடுத்துச் செல்வது, நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் மணலை எடுத்துச் செல்வது, அதிக விலைக்கு விற்பது போன்ற குறைபாடுகளை நீக்க வேண்டுமென்றும்; எடுத்துரைத்ததன் அடிப்படையிலும்;

சட்டப்பேரவை பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு.கோ.க.மணி அவர்கள் மணல் எடுத்து விற்பனை செய்வதை தனியாருக்கு கொடுக்கக் கூடாதென்றும்; அரசே நடத்த வேண்டுமென்றும்; இன்னும் சரியான விதிமுறைகளையும், நெறிமுறைகளையும் வகுத்து செயல்படுத்திட வேண்டுமென்றும்; எடுத்துரைத்ததன் அடிப்படையிலும்;

சட்டப்பேரவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு.கோவிந்தசாமி அவர்கள் மணல் எடுப்பதை டெண்டர் மூலம் தனியாருக்கு விடக் கூடாதென்றும்; அரசே மணல் குவாரிகளை கனிம வளத்துறை மூலம் நடத்த வேண்டுமென்றும்; எடுத்துரைத்ததன் அடிப்படையிலும்;

சட்டப்பேரவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு.வை.சிவபுண்ணியம் அவர்களும் மணல் விற்பனையை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்றும்; வெளி மாநிலங்களுக்கு மணல் கடத்துவது தடுக்கப்பட வேண்டுமென்றும்; எடுத்துரைத்ததன் அடிப்படையிலும்;

சட்டப்பேரவை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு.கு.செல்வம் அவர்கள் மணல் விற்பனையை அரசே தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும்; தனியாருக்கு வழங்கக் கூடாதென்றும்; எடுத்துரைத்ததன் அடிப்படையிலும்;

புரட்சி பாரதம் கட்சியின் தலைவர் திரு. பூவை ஜெகன்மூர்த்தி அவர்கள் மணல் குவாரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அதன் மூலம் மணல் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று எடுத்துரைத்ததன் அடிப்படையிலும்;

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த திரு.அப்துல் பாசித் அவர்கள் தனியாருக்கு மணல் குவாரிகள் வழங்கப்படக் கூடாதென்றும்; அரசே தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும்; எடுத்துரைத்ததன் அடிப்படையிலும்;

ஆற்று மணல் எடுத்து விற்பனை செய்வதை தொடர்ந்து அரசே மேற்கொண்டு நடத்துவதென்றும்;

ஒரு லாரியில் மூன்று யூனிட் வரை மணல் ஏற்றிக் கொள்ள அனுமதிக்கப்படலாமென்றும்;

வெளிமாநிலங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுவதை தடுப்பதற்கேற்ற வகையில் விதிகளில் தக்க திருத்தங்களை செய்யலாமென்றும்;

தொழில் துறை, பொதுப்பணித் துறை, வருவாய்த் துறை, உள்துறை ஆகிய துறைகளின் செயலாளர்களைக் கொண்ட குழு மணல் குவாரிகள் சம்மந்தமாக கண்காணித்து அரசுக்கு அறிக்கை தருவதென்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

*******